# பத்மனாபபுரம் நகராட்சி

பத்மனாபபுரம் நகர் மன்றத்தின் அவசர கூட்டம் **2020–**ம் வருடம் நவம்பர் மாதம் **19–**ம் தேதி காலை **11.30** மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம் மற்றும் அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மான விவரங்கள் பின்வருமாறு

## பொருட்கள்

1)பத்மனாபபுரம் நகராட்சிப் பகுதியில் திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் (ODF +) இல்லாத நகராட்சியாக அறிவித்திட 15/10/2020-க்குள் நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அலுவலக மின்னஞ்சல் கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மீது நடவடிக்கையாக தனி அலுவலர் பத்மனாபபுரம் நகராட்சி அனைத்து பள்ளிகள், மகளீர் சுய உதவி குழுக்கள் மற்றும் இருப்பிட சமுதாய நலச்சங்கங்கள் ஆகியவர்களிடம் 21 வார்டு பகுதிகளிலும் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சி என உரிய உறுதி மொழி படிவங்கள் பெறப்பட்டுள்ளது. மேலும் ஆலோசனை மற்றும் ஆட்சேபனையினை பொது மக்களிடம் இருந்து பெறுதல் குறித்து விளம்பரப்படுத்தும் விதத்தில் 31/10/2020 முதல் உள்ளூர் தொலைக்காட்சி (ம) செய்திதாள் வாயிலாக அறிவிக்கப்பட்டு 15 தினங்கள் கடந்த நிலையில் இதுநாள் வரை எந்த வித ஆட்சேபனை எதுவும் வரவில்லை. எனவே இந்நகராட்சியினை திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகராட்சி (ODF+) என அறிவித்திடவும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.கு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.**

**மன்றத் தீர்மானம் எண். 1723**

திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகராட்சி (ODF+) என அறிவிப்பு வெளியிட அனுமதிக்கப்படுகிறது.

2)கசடுகழிவு மேலாண்மை உபவிதிகள்

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920-ல் பிரிவு 306 உட்பிரிவு 5 (உ) மற்றும் உட்பிரிவு 6 (1920 தமிழ்நாடு சட்டம் 5)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் அறிவுரைகளின்படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்தம்) சட்டம் 1930 (1930-ம் தமிழ்நாடு சட்டம் 10)-ன் படியும் **பத்மனாபபுரம்**˙ நகராட்சிக்குள் சட்டப்படியான வரையறுக்கப்பட்ட எல்கைக்குள் கழிவறைகள் மற்றும் நச்சுத்தொட்டிகள் கட்டுதல், பராமரித்தல் மற்றும் கட்டிடங்களுடன் கூடிய கழிவறைகளில் இருந்து பெறப்படும் கசடு கழிவுகளை சேகரித்தல், இடம் பெயர்த்தல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக **பத்மனாபபுரம்**˙ நகராட்சியில் ஏற்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் உபவிதிகள்.

இந்த உபவிதிகள் 2019ம் ஆண்டின் தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற கட்டிட விதிகளுடன் இணைத்து படிக்கப்பட வேண்டும்.

**1. சிறு தலைப்பு, துவக்கம் மற்றும் ஏற்புடைமை**

i.இந்த உபவிதிகள் **பத்மனாபபுரம்**˙ நகராட்சிகசடுகழிவு மேலாண்மை உபவிதிகள் எனப்பொருள்படும்.

ii. இந்த உபவிதிகள் **கன்னியாகுமரி** மாவட்ட அரசிதழில் வெளியிடப்பட்ட அல்லது அரசால் தனிப்பட்ட முறையில் அறிவிப்பு செய்யப்பட்ட நாளிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்

iii.பார்க்கவும்: உபவிதி வரிசை எண் 9. பாதுகாப்பு

இந்த உபவிதிகள் **பத்மனாபபுரம்** நகராட்சியின் சட்டப்படியான வரையறைக்குட்பட்ட எல்லைக்குள் உள்ள குளியலறைகள், சலவை செய்யுமிடங்கள் / கழிவறைகள் மற்றும் சிறுநீர் கழிப்பிடங்களைக் கொண்ட குடியிருப்புகள் அல்லது வணிக நோக்கங்களுக்கான பயன்பாட்டில் உள்ள அனைத்து கட்டிடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படும்.

**2. விளக்கங்கள்**

இந்த உபவிதிகள் பத்தியில் உள்ள மேலும் தேவைப்படுகின்ற இனங்கள் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள வற்றிற்கான பொருள்கள் இங்கே விவரிக்கப்பட்டுள்ளன.

i. **“விண்ணப்ப அமைப்பு”**என்பது இந்த உபவிதிகள் தொடர்புடையவற்றை நேரத்திற்கு நேரம் ஏற்றுக்கொள்ளுதல் மற்றும் வெளியிடுகை.
ii. **“சட்டப்படியான அதிகாரம் அல்லது உரிமை**” என்பது இந்த உபவிதிகளை நடைமுறைப்படுத்துதல் நோக்கங்களுக்காக நேரத்திற்கு நேரம் வெளியிடுகை. மாநகராட்சி /நகராட்சி /பேரூராட்சி அல்லது அந்த வகையிலான துறைகளுக்கு உட்பட்டவை.
iii. **“கசடுகழிவு”** என்பது பச்சையான அல்லது பகுதியளவு செரிக்கப்பட்ட குழம்பு அல்லது திடதிரவக்கலவையாக உள்ள சேகரிக்கப்பட்ட, சேமிக்கப்பட்ட அல்லது சுத்திகரிக்கப்பட்ட வீட்டுக்கழிவு நீர் கலந்த அல்லது கலக்காத மலக்கழிவு மற்றும் சாக்கடை நீர் ஆகும். இது குழி கழிவறைகள் அல்லது நச்சுத்தொட்டிகளிலுள்ள திடமாக உள்ள அல்லது படிமானமடைந்த கலவையாகும்.
iv. **“செயல்படுத்தும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு”** என்பது சுத்திகரிப்பு வசதியை இயக்கி பராமரிக்கும் பொறுப்பிலுள்ள நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு ஆகும்.
v. **“உரிமக்கட்டணம்”** என்பது கழிவு நீரகற்று வாகன இயக்குபவர்கள் தங்கள் வாகனத்தை இயக்குவதற்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு தொகுப்பில் உரிமம் பெறுவதற்காக செலுத்த வேண்டிய ஆண்டுக்கட்டணம் ஆகும்

vi. “இயக்குபவர்” என்பது கசடுகழிவு மற்றும் கழிவு நீர் ஆகியவற்றை சேகரித்து, எடுத்துச்சென்று அப்புறப்படுத்த உரிமம் பெற்ற ஒரு நபர், நிறுவனம், சுய உதவிக்குழு, தனியார் நிறுவனம் ஆகிய ஏதாவது ஒன்று ஆகும்.

vii. அந்தந்த பகுதிகளின் சுகாதார அமைப்பு என்பது அமைப்பு-அ ஆகும். இதில் கழிவு நீர் உற்பத்தியாகும் இடத்திலேயே அல்லது அதற்கு அருகில் சேகரிக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு மற்றும் அல்லது சுத்திகரிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்படும்.

viii. **‘‘சுகாதாரக்கழிவறை’’** என்பது உள்ளாட்சி அமைப்புகளின் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் நடைமுறைகள், வடிவமைப்பு மற்றும் விவரங்களின்படி பாதுகாப்பான கழிவு சேகரிப்பு மற்றும் அப்புறப்படுத்துவதற்காக கட்டப்பட்ட நச்சுத்தொட்டியுடன் கூடிய அல்லது பாதாள சாக்கடைத்திட்டத்தில் இணைக்கப்பட்ட கழிவறை அல்லது சிறுநீர் கழிவறை எனப்பொருள்படும்

ix. **‘‘சுகாதாரமற்றகழிவறை’’** என்பது கழிவறைகளில் உள்ள மலம் மனிதனால் அகற்றப்படுதல் விலங்குகளால் சுத்தப்படுத்துதல் மற்றும் மலக்கழிவுகள், முழுமையான உரமாவதற்கு முந்தைய கழிவுகள் தண்ணீர் ஊற்றி, வெளியேற்றி நேரடியாக குழிகள் அல்லது திறந்தவெளி வடிகால்களில் விடுதல் எனப்பொருள்படும்.

x. **‘‘கழிவுநீர்’’** என்பது நச்சுத்தொட்டி, கழிவுக்குட்டை அல்லது பிற அந்தந்த பகுதிகளில் கழிவு சுத்திகரிக்கும் அமைப்புகளில் சேகரிக்கப்பட்டுள்ள திரவ மற்றும் திடநிலையிலுள்ள பொருளாகும்

xi. **‘‘நச்சுத்தொட்டி’’**என்பது உள்ளாட்சி அமைப்புகளால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல் நடைமுறைகள், வடிவமைப்பு மற்றும் விபரங்கள் படி கட்டப்பட்டு கழிவுநீரினை திடநிலை பொருள் படிதல் மற்றும் காற்றுப்புகா செரிமானம் ஆகியவற்றின் மூலம் சுத்திகரிப்பு செய்யும் ஒரு நிலத்தடி தொட்டியைக்குறிக்கும்.

xii. **‘‘குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்கள்’’** என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அல்லது தனியார் வாகனங்கள் இயக்குபவர்களுக்குச் சொந்தமான மோட்டார் பம்ப்புகள் மற்றும் சேமிப்புத் தொட்டிகள் பொருத்தப்பட்ட கழிவுநீர் உறிஞ்சும் வசதியுடன் கூடிய வெற்றிட வாகனங்கள் ஆகும். நச்சுத் தொட்டியிலிருந்து கசடு கழிவுகளை எடுத்துச்சென்று வெளியேற்றுவதற்குத் தேவையான வடிவமைப்பு விபரக்குறிப்புகளுக்கு அவ்வப்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் ஒப்புதல் வழங்கும்.

xiii. **‘‘உரிமையாளர்’’** என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்திற்கோ அல்லது அதன் ஒரு பகுதிக்கோ சொந்தக்காரராக இருப்பவர்

xiv. **‘‘குடியிருப்போர்’’** என்பது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்திலோ அல்லது அதன் ஒரு பகுதியிலோ வாடகைக்கு குடியிருப்பவர்

xv. இயக்குதல் மற்றும் பராமரித்தல் என்பது கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்தில் நடைபெறும் இயக்குதல் மற்றும் பராமரித்தல் தொடர்பான அனைத்து பணிகள், வழங்கப்படும் சேவைகள் மற்றும் வசதிகள் ஆகியவை ஆகும்

xvi. “எளிய கட்டணம்” என்பது ஒவ்வொரு முறை கசடு கழிவு அப்புறப்படுத்தும் நிலையத்திற்கு கசடு கழிவு மற்றும் கழிவு நீரை ஏற்றிச்செல்லும் போதும் இயக்குபவர் செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பிற்கு செலுத்த வேண்டிய கட்டணம் ஆகும.

xvii. **‘‘சுத்திகரிப்பு வசதி’’** என்பது அவ்வப்போது நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்பட்ட வடிவமைப்பு குறிப்புகள் மற்றும் வழிமுறைகளைக் கொண்டு கசடு கழிவு மற்றும் சாக்கடை கழிவு நீரை சுத்திகரித்துஅப்புறப்படுத்தும் திறனுள்ள சுத்திகரிப்பு நிலையம் ஆகும்.

xviii. **‘‘நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு’’**என்பது பத்மனாபபுரம் நகராட்சியைக் குறிக்கும்

xix. “நகர உள்ளாட்சித் தொகுப்பு” என்பது கசடு கழிவு சுத்திகரிப்பு அல்லது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை பயன்படுத்தும் பத்மனாபபுரம் நகராட்சி, கோதநல்லூா், குமாரபுரம், விலவுா், திருவிதாங்கோடு, முளகுமுடு, வில்லுக்குறீ, இரணியல், வோ்கிளம்பி பேரூராட்சிகள் மற்றும்

மாநில அரசால் அவ்வப்போது அறிவிக்கப்படும் பிற நகர உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவை அடங்கிய தொகுப்பு ஆகும்.

**3. உரிமையாளர் அல்லது குடியிருப்போரினால் செயல்படுத்தப்பட வேண்டிய சீர்திருத்த நடவடிக்கைகள் மற்றும் உடன்பாடுகள்**

நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின் எல்லைக்குள் அமைந்துள்ள ஒரு கட்டிடத்தின் உரிமையாளர் அல்லது அதில் முழுவதுமோ அல்லது பகுதியிலோ குடியிருப்போர்இந்த துணைவிதிகள் நடைமுறைக்கு வந்த தேதியில் இருந்து பின்வரும் கடமைகளைச் செய்ய பொறுப்பாகிறார்.

i. துணை விதிகளின்படி அதிகாரிகள் வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிட்ட நேரத்திற்குள் கட்டிடங்களில் சுகாதாரமில்லாத கழிவறைகளின் பயன்பாடுகளை நிறுத்த வேண்டும் மற்றும் அருகிலுள்ள பொது வடிகால்/திறந்த நிலம்/நிலைகளில் கழிவு நீரினை வெளியேற்றுவதை நிறுத்த வேண்டும். மற்றும் சுகாதாரமான கழிப்பறைகளை மட்டுமே தனக்குச் சொந்தமான அல்லது குடியிருக்கும் கட்டிடத்தில் கட்டி பயன்படுத்த வேண்டும்.

ii. கசடு கழிவுகள் நிறைந்து வெளியேறாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் நச்சுத் தொட்டிகளை சரியான முறையில் பராமரிக்க வேண்டும்.

iii. நச்சுத் தொட்டிகள் நிறைவதற்கு முன்பே உரிய அதிகாரிகளுக்கு முறையாக தகவல் அளித்து முன்னறிவிப்புடன் குறித்த நேரத்தில் ஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டும்.

iv. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு அறிவுறுத்தியுள்ளபடி நச்சுத் தொட்டி, வடிகுட்டை அல்லது பிற அந்தந்த பகுதியில் கழிவு சேகரிப்பு அமைப்புகளின் வடிவமைப்பு மற்றும் செயல்பாடுகளின் தேவைக்கேற்ப குறிப்பிட்ட கால இடைவெளியில் கழிவுநீரகற்றும் செயல்பாடு நடைபெற வேண்டும்.

v. கசடுகழிவு மற்றும் கழிவுநீர் சேகரிக்க மற்றும் போக்குவரத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட இயக்குபவர்களையே ஈடுபடுத்த வேண்டும்.

**4. துணைவிதிகளின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் அமலாக்கம் செய்தல்**

இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வந்த நாளிலிருந்து பின்வரும் செயல்பாடுகளை செயல்படுத்த அதிகாரிகளுக்கு உரிமை உள்ளது.

i. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குள் அமைந்துள்ள வீடுகளை கணக்கீடு மற்றும் ஆய்வு செய்தல் மற்றும் இந்த துணை விதிகளுக்கு இணங்கிஉள்ள கட்டிடங்களுக்கு சான்றிதழ் வழங்குதல்.

ii. இந்த துணை விதிகளுக்கு உட்பட்டு செயல்படாத மற்றும் இணக்கமில்லாத கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்போருக்கு அறிவிப்புகள் வழங்குதல்.

iii. தங்கள் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளிலுள்ள நச்சுத்தொட்டி, கழிவுக்குட்டை அல்லது பிற அந்தந்த பகுதிகளில் கழிவு சுத்திகரிக்கப்படும் வசதிகள் உள்ள கட்டிடங்களைப்பற்றிய தகவல்கள் அடங்கிய தகவல்தளம் பராமரித்தல்.

iv. துணைவிதிகளின் இணக்கத்தை செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல்.

v. கசடுகழிவு மற்றும் நச்சுக்கழிவு மேலாண்மை பற்றிய விழிப்புணர்வு தொடர்பாக தகவல், கல்வி மற்றும் பரிமாற்ற பிரச்சாரத்தை நடத்துதல்

vi. தங்கள் நகர உள்ளாட்சித் தொகுப்பு அல்லது செயல்படுத்தும் உள்ளாட்சி அமைப்பு எது பொருத்தமானதோ அதன்அதிகார எல்லைக்குள் இயக்கும் இயக்குபவர்கள் அனைவருக்கும் சுத்திகரிப்பு நிலையம் செயல்படும் நேரம், அப்புறப்படுத்தும் முறை, எளிய கட்டணம் மற்றும் குறிப்பிட்ட நேரங்களில் எந்தெந்த பாதைகளை தவிர்க்க வேண்டும் என்பது போன்ற விவரங்களை அறிவித்தல்.

vii. உரிமம் பெற்ற இயக்குபவர்களை வழிகாட்டி, கண்காணித்து அவர்கள் பெயர்களை பொதுமக்களுக்கு வெளியிட்டு இயக்குபவர்கள் விதி மீறும் போது அவர்களைப்பற்றி பொதுமக்கள் புகாரளித்தல் /குறைதீர்க்கும் அணுகுமுறை பற்றிய விவரங்களையும் வெளியிடுதல்.

viii. கசடு கழிவுகள் மற்றும் கழிவு நீர் ஆகியவற்றை சேகரித்தல், எடுத்துச்செல்லுதல் மற்றும் சுத்திகரிப்பு நிலையங்ளில் வெளியேற்றுதல் ஆகியவற்றை வழிகாட்டி, முறைப்படுத்தி மற்றும் கண்காணிப்பு செய்தல்.

ix. குறிப்பிட்ட வாகனங்களின் தரம் மற்றும் பராமரிப்பினை ஆய்வு செய்து முறைப்படுத்துதல்.

x. சேகரிக்கப்பட்டு சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படும் கசடுகழிவு மற்றும் கழிவுநீரின் தரத்தினை ஆய்வு செய்தல்.

xi. நகர உள்ளாட்சித் தொகுப்பு அல்லது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு எது பொருத்தமானதோ அதன் அதிகார எல்லைக்குள் இயக்கும் இயக்குபவர்கள் அனைவரும் தாங்கள் எடுத்துச் செல்லும் கசடுகழிவு மற்றும் கழிவுநீரை நேரடியாக சுத்திகரிப்பு நிலையத்தில் அனுமதித்தல் அல்லது அப்புறப்படுத்துதல்.

xii. இந்த உபவிதிகள் செயல்பாட்டுக்கு வந்த நாளிலிருந்து நியாயமான கால அளவுக்குள் நகர உள்ளாட்சித் தொகுப்பு அல்லது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு எது பொருத்தமானதோ அதனுடன் கசடுகழிவு மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிக்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை 15.05.2020 தேதியிட்ட அரசாணை எண் G.O. (2D) 35ன்படி கையொப்பமிடவேண்டும்.

xiii. நகர உள்ளாட்சி அமைப்பிலுள்ள மக்கள் தொகைக்கேற்ப இந்த உபவிதிகளின் இணைப்பு A வில் கொடுக்கப்பட்டுள்ள வாய்ப்பாட்டின் அடிப்படையில் பொருத்தமான கட்டணத்தை சுத்திகரிப்பு வசதிக்கு இயக்கம் மற்றும் பராமரிப்பு கட்டணமாக வழங்க வேண்டும்.

xiv. தங்கள் எல்லைக்குள் இயங்கும் இயக்குபவர்கள் செல்லத்தக்க உரிமம் பெற்றவர்களாக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

xv. இந்த துணைவிதிகளை மீறும் உரிமையாளர்கள், குடியிருப்போர், அல்லது இயக்குபவர்கள் மீது விசாரணை மேற்கொண்டு அபராதம் விதித்தல்.

**5.இயக்குபவர்களை நியமித்தல் மற்றும் இயக்குதல்**

i. இந்த உபவிதிகள் செயல்பாட்டுக்கு வந்த நாளிலிருந்து குறிப்பிட்ட காலத்திற்குள் சட்டப்படியான அதிகாரம் உள்ளவர் அல்லது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு விருப்பமுள்ள இயக்குபவர்களிடமிருந்து குறிப்பிட்ட நிதியாண்டுக்கு கழிவுநீரகற்றும் சேவைகள் வழங்குவதற்கான விண்ணப்பங்களை கோரி அறிவிப்பு வெளியிடலாம்.

ii. இயக்குபவர்கள் தங்கள் விண்ணப்பத்தை செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பில் சமர்ப்பித்து உரிமக்கட்டணமாக ரூ.1000 (ரூபாய் ஆயிரம் மட்டும்) அல்லது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு அவ்வப்போது குறிப்பிடும் தொகையை கட்ட வேண்டும்.

iii. விண்ணப்பங்களை பரிசீலித்து உரிமம் பெறுவதற்கான தகுதியுள்ள இயக்குபவர்களுக்கு அந்த நிதியாண்டுக்கான உரிமம் உபவிதிகளின் இணைப்பு B வில் வழங்கப்பட்டுள்ள படிவத்தில் வழங்கப்படும்.

iv. செல்லத்தக்க உரிமம் இல்லாத இயக்குநர்கள் உபவிதிகளை மீறியவர்களாக கருதப்படுவர்.

v. அதிகாரிகள் அல்லது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு அவ்வப்போது வெளியிடும் வழிமுறைகளுக்கேற்ப இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு குறிப்பிட்ட வாகனங்கள் மற்றும் அதன் தொடர்புடைய உபகரணங்களை இயக்குதல் மற்றும் பராமரித்தலுக்கு பொறுப்பாகிறார்.

vi. .அதிகாரிகள் அவ்வப்போது வழங்கும் அறிவுறைகளுக்கேற்ப இயக்குபவர்கள் கட்டிடங்களிலிருந்து வெளியேறும் கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீரை அதன் செயல்திறன் தரத்தை தீர்மானித்து சேகரித்து மற்றும் எடுத்துச்செல்வதற்கு பொறுப்பாகிறார்.

vii. இயக்குபவர்கள் உரிம விதிகளுக்கு இணங்கி செயல்பட வேண்டும்.

viii. இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்புக்கு சொந்தமான குறிப்பிட்ட வாகனங்கள் தொழிற்சாலை கழிவுகளையோ அல்லது தொழிற்சாலை கழிவு கலந்த நீரையோ எடுத்துச்செல்லக்கூடாது.

ix. இயக்குபவர்கள் அனைத்து உள்ளூர் சட்டங்களுக்கு இணங்கி இந்த உரிமத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகளை செயல்படுத்துவதற்கு தேவையான அனுமதி மற்றும் உரிமங்களை பராமரிக்க வேண்டும்.

x. இயக்குபவர்கள் பயிற்சி பெற்ற நபர்களையே நியமித்து, கசடுகழிவுகள் மற்றும் கழிவு நீரை சேகரித்து எடுத்துச்செல்வதற்குத் தேவையான அனைத்து பாதுகாப்பு கருவிகளையும் வழங்க வேண்டும்.

xi. இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு அவ்வப்போது வழங்கும் செயல்திறன் தரத்தின்படி கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீர் சேகரிக்கப்பட்டு எடுத்துச்செல்வதை உறுதி செய்ய தேவையான அளவு நபர்களை நியமித்தல் வேண்டும்.

xii. மனிதக்கழிவுகளை அகற்ற மனிதர்களை பணியில் அமர்த்துவதை தடுத்தல் மற்றும் அவர்களின் மறுவாழ்விற்கான சட்டம் 2013 மற்றும் விதிகளின்படி எந்நேரமும் இணங்கி நடப்பதை இயக்குபவர்கள் உறுதி செய்ய வேண்டும்.

xiii. விபத்து நடைபெறும்போது அதிகாரிகளின் அறிவுரையின்படி அனைத்து பாதுகாப்பு நடவடிக்கைகளையும் இயக்குபவர்கள் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு செயல்படுத்த வேண்டும்.

xiv. அதிகாரிகளால் குறிப்பிடப்பட்டுள்ள சுத்திகரிப்புஇடங்களில் கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீர் பாதுகாப்பாக வெளியேற்ற இயக்குபவர் அல்லது நகர உள்ளாட்சி அமைப்பு பொறுப்பாகிறது.

xv. கசடுகழிவுகள் மற்றும் கழிவுநீரை சுத்திகரிப்பு இடத்தில் வெளியேற்ற இயக்குபவர்கள் ரூ.100 அல்லது அவ்வப்போது செயல்படுத்தும் நகர உள்ளாட்சி அமைப்பு குறிப்பிடும் கட்டணத்தை எளிய கட்டணமாக கட்ட வேண்டும்.

**6. துணை விதிகளின் மீறலுக்கான அபராதம்**

அதிகாரிகள் இந்த துணை விதிகள் மீறலை ஆராய்ந்து கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்

i. கட்டிட உரிமையாளர் அல்லது குடியிருப்பவராக இருந்தால் அவர்களுக்கு அதிகாரி முன்னெச்சரிக்கை அறிவிப்பு வழங்கலாம். ஒவ்வொரு விதி மீறலுக்கும் ரூ.5000.00 அல்லது அவ்வப்போது குறிப்பிடப்படும் தொகையினை அபராதமாக விதிக்க உரிமை உண்டு. உரிமையாளர் தொடர்ந்து இந்த துணை விதிகளை மீறினால், அவருக்கு ரூ.25000.00 க்கு மிகாமல் அபராதம் விதிக்க அதிகாரிக்கு உரிமை உண்டு.

ii. கழிவுகசடு எடுத்துச்செல்லும் நிறுவனத்தை இயக்குபவராக இருந்தால் அவருக்கு அதிகாரி முன்னெச்சரிக்கை அறிவிப்பு வழங்கலாம் மற்றும் ஒவ்வொரு விதி மீறலுக்கும் ரூ.50000.00அல்லது அவ்வப்போது குறிப்பிடப்படும் தொகையினை அபராதமாக விதிக்க உரிமை உண்டு. இயக்குபவர் தொடர்ந்து இந்த துணை விதிகளை மீறினால் அவருக்கு ரூ.200000.00 க்கு மிகாமல் அபராதம் விதிக்க அதிகாரிக்கு உரிமை உண்டு.

iii. இயக்குபவர் பத்தி 5ல் உள்ள உபபத்தி(v) மற்றும் (ix) ஐ மீறினால், முன்னெச்சரிக்கை அறிவிப்பு வழங்கி, உரிமத்தை ரத்து செய்யவும் அதிகாரிக்கு உரிமை உண்டு.

**7.மேல்முறையீடு**

i. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இந்த துணை விதிகள் நடைமுறைக்கு வந்த தேதியில் இருந்து ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் ஒரு மேல் முறையீட்டு அமைப்பினை உருவாக்கி தேவையான அறிவிப்புகளை வெளியிட வேண்டும்.

ii. உரிமையாளர், குடியிருப்போர் அல்லது இயக்குபவர்களுக்கு அதிகாரிகளால் வழங்கப்பட்ட முன்னெச்சரிக்கை அறிவிப்பு கிடைத்த 30 நாட்களுக்குள் மேல் முறையீட்டு அமைப்பில் அறிவிப்புக்கு எதிராக மேல் முறையீடு செய்ய உரிமை உண்டு.

iii. மேல் முறையீடு தாக்கல் செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் மேல் முறையீட்டு அமைப்பு தன்னுடைய விசாரணையைத் தொடங்கும்.

iv. அதிகாரிகள், உரிமையாளர் மற்றும் இயக்குபவர்கள் மேல் முறையீட்டு அமைப்பு எடுக்கும் முடிவுகளுக்கு இணங்க பொறுப்பாவார்கள்.

**8.** பிரச்சனைகளை நீக்குவதற்கான அதிகாரம்

இந்த துணைவிதிகளை நடைமுறைப்படுத்தும்போது பிரச்சனைகள் ஏற்பட்டால் **பத்மனாபபுரம்** நகராட்சி மன்றத்தின் ஆணைப்படி பிரச்சனைகளை நீக்க துணைவிதிகளில் திருத்தம் செய்து **கன்னியாகுமரி** மாவட்ட அரசிதழில் வெளியிட வேண்டும்.

**9.** பாதுகாப்பு

இந்த துணைவிதிகளில் ஏதாவது விதிகள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 (தமிழ்நாடு சட்டம் V 1920) அல்லது தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம்[1] அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிடங்கள் விதிகள் 2019 அதனுடைய அடுத்தடுத்த திருத்தங்கள் ஆகியவற்றில் பொருந்தாவிட்டால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 (தமிழ்நாடு சட்டம் V 1920) அல்லது தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டம் அல்லது தமிழ்நாடு ஒருங்கிணைந்த மேம்பாடு மற்றும் கட்டிடங்கள் விதிகள் 2019 அதனுடைய அடுத்தடுத்த திருத்தங்களில் உள்ள குறிப்பிட்ட விதி மட்டுமே மேலோங்கி நிற்கும் ஏனைய துணை விதிகள் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும்.

மேலும் விதிகளில் கூறப்பட்டுள்ள நிரவாக கட்டணஙகளை விதித்தல் வசூல் செய்தல் அபராத கட்டணத்தை வசூல் செய்தல் மற்றும் அவற்றின் தொடர் நடவடிக்கை ஆகியவற்றிற்கு நகராட்சியின் ஆணையாளருக்கு நகர்மன்றத்தால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

கசடு கழிவு மேலாண்மை இயக்குதல் விதிமுறைகள் 2014ன் படி மேற்கண்ட துணை விதிகள் ஏற்படுத்திடவும் அதனை தினசரி நாளிதழில் விளம்பரம் செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.120/2019/இ1

<u>அலுவலக குறிப்பு</u>

துணை விதிகளை மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>மன்ற தீர்மானம் எண். 1724</u>**

**துணை விதிகள் மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கப்படுகிறது.**

**<u>மன்றத் தீர்மானம் எண்.1724, நாள்.19.11.2020.</u>**

**<u>துணை விதிகள் மன்றம் அங்கீகரித்து அனுமதிக்கப்படுகிறது.</u>**

**<u>நகர் மன்றத் தீர்மான எண்.1724, நாள்.19.11.2020.</u>**

**ஒப்பம்/—**

தனி அலுவலர்(ம) ஆணையாளர்,

பத்மனாபபுரம் நகராட்சி.

**// உண்மை நகல் //**

ஆணையாளர்,

பத்மனாபபுரம் நகராட்சி.